தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வைகாசி 10, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 மே 24, வியாழக்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:

"அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்

நன்குடையான் கட்டே தெளிவு."

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவரைத் தேர்வு செய்யலாம்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அறிவிப்பு

உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள், உறுதிமொழியை எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: ஏற்கெனவே உறுதிமொழியை எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இப்போது உறுதிமொழியை எடுத்துக்கொள்ளலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகே பேரவையில் அமர வேண்டும்.